செ. கு. எண்:036 நாள் :12.02.2014

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 12.2.2014

கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம், மஜரா கோவனூர் அருகே 7.1.2014 அன்று நாயக்கன்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. அழகர்சாமி என்பவரின் மகன் ரங்கராஜ்;

கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் வனக்கோட்டம் அருகே 8.1.2014 அன்று கூடலூர் தெற்கு கிராமம், மஜரா தெற்குப்பாளையத்தைச் சேர்ந்த திரு. ராமுகுட்டி என்பவரின் மகன் நாகராஜ்;

நீலகிரி மாவட்டம், பந்தலூர் வட்டம், தட்டம்பாறை அருகே 11.1.2014 அன்று சேரம்பாடி கிராமம், கொளப்பள்ளி என்னும் பகுதியைச் சேர்ந்த திரு. மாரிமுத்து என்பவரின் மகன் ரவி என்கிற ரவிச்சந்திரன்;

—— ஆகியோர் காட்டு யானைகள் தாக்கியதில் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானைகள் தாக்கியதில் அகால மரணமடைந்த ரங்கராஜ் நாகராஜ் மற்றும் ரவி என்கிற ரவிச்சந்திரன் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு வனத்துறை மூலம் தலா மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**